பணிநிறைவு காணும்

**திரு சு. இரவிச்சந்திரன், அவர்களுக்கு,**



கெழுமிய அன்பின் கேள்வன்;
கெழுதகை நட்பின் முதல்வன்,
விழுமிய உறவின் தோழன்!
அழகியத் தமிழின் பெருமகன்!

சென்னையில் வாழ்வைத் தொடர்ந்தார்,
சீரிய அரசுப் பணியில் சேர்ந்தே!
நன்னிய கல்வியும் இங்கே,
நவின்றநல் உறவுகள் இங்கே!

மன்னிய ஊராய்ச் சென்னை,
மருவின்றி அணைத்து ஏக,
முன்னோர் நிறைந்த வாழ்வோ,
முகிழ்ந்திடும் வெண்ணெய் யூராம்!

ஊத்துக்குளி என்பததன் பெயராம்!
உற்றதாம் தந்தை வாழ்வு அங்கே!
உயரிய கர்ணம் என்பதாக!
பெயரினில் கடைசிப் பிள்ளை!

பெற்றதோ பெருமை யாவும்;
உற்றாரும் உயர்த்திக் கொள்ள,
மற்றதாய் நண்பர் தமையும்,
மகிழ்ந்தே அணைத்துக் கொள்வார்!

வேறு -

மாமன் மகளோடு மனையறம் கொண்டு ஏகி,
பூமகள் செல்வி அனிதாவோடு பொன்னென,
மாமகன் அரவிந்தன் பிறந்து, வளர்ந்தார்!
பூமணம் கொண்டாள் மகளும்; மகிழ்வில்
தாமொரு மகளைத் தந்தாள் மகாலஷ்மி!

வேறு -

தீதிலாச் சுற்றம் சூழ சேய்மகன்;
மாதவள் கைதலம் பற்றி,
மங்கள வாழ்வு கொண்டான்!
மனையறம் சிறக்க வாழ்வான்!

பணியதும் நிறைவு என்றார்;
பழகிய காலம் மணக்கும்!
பிணியேதும் இல்லா வாழ்வே;
பிறந்திட வேண்டும் இனியே!

இனிவரும் காலம் தாமே,
இன்னியக் கதைகள் சொல்லும்!
மன்னிய உறவில் முகிழ்ந்தே;
மறுபடி நினைந்து மகிழும்!

வேறு -

கனவுகள் நிறைந்ததாம் கல்விச் சூழல்;
நினைவுகளைப் போற்றும் பணியின் ஏற்றம்!
மனத்தை ஆளும் மகிழ்வின் பெருக்கம்!
சினத்தை மறந்துச் சிந்தையைத் தூண்டும்!

மனத்தை நிறைக்கும் மகிழ்வு வேண்டும்!
மருவிலா இன்பம் சூழ்ந்திடல் வேண்டும்!
உறுத்தும் சிறுமைகள் அகல வேண்டும்1
உயரிய காலம் மலர்ந்திட வேண்டும்!

இல்லறம் கண்ட இன்னிய காலம்;
இதயத்தில் மீண்டும் முகிழ்ந்திட வேண்டும்!
மன்னிய பெருமைகள் மலர்ந்திட வேண்டும்!
எண்ணிய காலம் வாழ்ந்திடல் வேண்டும்!

இருண்ட நினைவுகள் சிதைந்திட வேண்டும்!
இனிவரும் காலம் நிறைந்திட வேண்டும்!
கல்வியின் காலம் கனவுகள் நிறைந்தது!
பணியின் காலம் வரையறை கொண்டது!

இனிவரும் காலம் மூன்றாம் நிலையே!
நினைவுகள் சுமந்து, நெகிழ்ந்து போற்றி;
மனந்தரும் சுகத்தில் திளைந்து மகிழ்ந்து,
இனியதாய் எந்நாளும் வாழ்ந்திருக்க,
இந்நாளில் நிறைந்து வாழ்த்துவேனே !

அன்புடன்,

கு.ப. அசோகன். (20-02-2019)